(ஆ) கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுதல் மற்றும் தென்னை விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், எங்களது கழகத்தின் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதி தொடங்கிய கொடுமையான கஜா புயல் நவம்பர் மாதம் 16 ஆம் தேதி காலை வரை அடித்து, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு மிகப் பெரிய சோகத்தினை ஏற்படுத்தியதுடன் அவர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரங்களை முழுவதுமாகச் சீரழித்துவிட்டது. எங்களுடைய கழகத் தலைவர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அந்தப் பகுதிகளை நேரில் வந்து பார்த்த நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்கள் எங்களது கழகத் தலைவர் அவர்களிடம் மனுக்கள் கொடுத்ததன் பேரிலே, கடந்த 5-1-2019 அன்று நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் எங்களது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கலந்துகொண்டு உரையாற்றிய நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்தேன். அந்த நேரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், பட்டா நிலங்கள் உள்ளவர்களுக்கு அதே இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும், பட்டா நிலங்கள் இல்லாமல் உள்ளவர்களுக்கு தொகுப்பு வீடுகள் அல்லாமல் அடுக்குமாடிக் கட்டடங்களாகக் கட்டிக்கொடுக்கப்படும் என்றும் இந்த அவையிலே ஒரு உத்தரவாதத்தினைக் கொடுத்திருக்கிறார்கள்.*

பொதுவாக IAY வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது 269 சதுர அடியிலும், பசுமை வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது 300 சதுர அடியிலும்தான் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இது ஒரு தனி குடும்பமாக, சிறு குடும்பமாக இருப்பவர்களுக்கு வேண்டுமானால் போதுமானதாக இருக்கும். ஆனால், ஒரு

2019 ஜூலை 4] [திரு. உ. மதிவாணன்]

கூட்டுக் குடும்பமாக இருப்பவர்களுக்கு இது போதுமானதாக இல்லை. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அறிவித்ததற்கிணங்க குறைந்தபட்சமாக 400 சதுர அடியில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன். தற்போது 6 மாத காலம் முடிந்துவிட்டது. தற்போது பருவமழை காலங்கள் தொடங்கவிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மதிவாணன், சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. உ. மதிவாணன்: *முடித்துவிடுகிறேன். நான் நிறைய சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களை கவன ஈர்ப்பு என்ற முறையில்தான் அனுமதித்திருக்கிறேன்.*

முற்பகல் 11-45

திரு. உ. மதிவாணன்: *நிறைய சொல்லவில்லை. வீடுகள் கட்டிக் கொடுக்க மாட்டார்களா என்ற ஏக்கம் அந்த மக்களுக்கு இருக்கிறது. அது சம்பந்தமாக ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டு, அந்த மக்கள் மத்தியில் பதட்டம் இருக்கிறது. போராட்டக் களத்திற்கு வந்து விடுவார்களோ என்று ஓர் அச்சம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எவ்வளவு விரைவாக அந்த மக்களுக்கு வீடு கட்டி கொடுக்க வேண்டுமோ அதை கட்டிக் கொடுக்க வேண்டும். நான் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் 400 சதுர அடிக்குக் குறையாமல் கட்டிக் கொடுக்க வேண்டும்.*

அதோடு, அந்தப் பகுதியில் தென்னை மரங்கள் விழுந்ததற்கு இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. குறிப்பாக, மன்னார்குடி பகுதியில்; திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் சொன்னார்கள், அந்த ஃபைல் எல்லாம் வேளாண்மைத் துறை அதிகாரிகளிடம் இருக்கிறதே தவிர, இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. கொடுக்கப்படாத நிவாரணங்களையும் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, மக்களுடைய அந்த அவல நிலையை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட கஜா புயலால், தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பெரும் சேதம் ஏற்பட்டது. இம்மாவட்டங்களில் நகர்ப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித் தருவதற்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக மொத்தம் 28,671 வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகளாக ரூ.1,742.22 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ மழை தொடங்கவிருக்கிறது. கோடைக் காலத்தை எப்படியோ ஓட்டிவிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், ஓர் அவலநிலை. தான் பெற்ற குழந்தைக்கு பால் கொடுப்பதற்குக்கூட மறைவான இடங்கள் இல்லாமல், குடிசை வீடுகளை இழந்த விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 6 மாதங்கள் முடிந்துவிட்டன. வீடு கட்டும் பணிகளை விரைவுபடுத்தி அந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்தால், ஏழையெளியவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதை இந்த அரசுக்கு நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலின் மூலமாக இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நாகப்பட்டினம் மாவட்டத்தில் 7,458 தனி வீடுகள் ரூ.298.32 கோடி மதிப்பீட்டிலும், 5,308 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.477.72 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 12,766 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் ரூ.776.04 கோடி மதிப்பீட்டில் 12 நகரங்களில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.*

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் பகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 313 புதிய தனி வீடுகள் ரூ.12.52 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் கட்டும் பணிகள் பயனாளிகளின் தலைமையில் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, தனி வீடுகள் அவரவர்கள் ஏற்கெனவே இருந்த இடத்தில் 300 சதுர அடி பரப்பளவில் ரூ.2,10,000 என்ற மதிப்பில் கட்டப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அடுக்குமாடிக் குடியிருப்புகளாக G + 2 என்ற திட்டத்தின்கீழ் கட்டப்பட இருக்கிறது என்பதையும், அவை 400 Square Feet-ஆக இருக்கும் என்றும், இன்னொரு திட்டத்தின்கீழ், ரூ.2,10,000/- திட்ட மதிப்பீட்டில் ஏற்கெனவே குடிசை வீடுகளில் இருந்து கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 300 சதுர அடியில் வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதனையும், கூடிய விரைவில் இந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதனையும், அவசர அவசியத்தைக் கருதி இந்தப் பணிகள் துரிதமாகத் துவங்கப்பட்டு பயனாளிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற உறுப்பினர்களும் இதுகுறித்து பல்வேறு கேள்விகளை சட்டமன்றச் செயலகத்தில் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து தஞ்சாவூர் மாவட்டத்தில் தனி வீடுகளாக 1,217 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 960 குடியிருப்புகளும், ஆகமொத்தம் 2,177 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு நான் சொல்லி முடித்துவிட்டேன்.

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 5,502 வீடுகள் தனி வீடுகளாகவும், 4,284 வீடுகள் அடுக்குமாடிக் குடியிருப்புகளாகவும், ஆகமொத்தம் 9,786 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-50

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனி வீடுகளாக 2,518 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 400 சதுர அடி பரப்பளவில் 1,424 வீடுகளும், ஆகமொத்தம் 3,942 வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம், தனி வீடுகளாக 16,695 வீடுகளும், அடுக்குமாடிக் குடியிருப்புகளாக 11,976

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2019 ஜூலை 4

வீடுகளும், ஆக, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மொத்தமாக 28,671 வீடுகள் தனி வீடுகளாகவும், அடுக்குமாடிக் குடியிருப்பு வீடுகளாகவும் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு, பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, உரியவர்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென்னை மரங்களுக்கான நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கான நிவாரணம் மற்றும் அவற்றை வெட்டி எடுப்பதற்காக ரூ.1,100/-ம், புத்துயிர் மற்றும் மறு சாகுபடி செய்ய இதுவரை இல்லாத வகையில் ரூ.312/-ம், மறு சாகுபடி செய்யப்பட்ட தென்னை மரக் கன்றுகளைப் பராமரிப்பதற்காக ரூ.100/-ம், ஆகமொத்தம் ரூ.1,512/-ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தவகையிலே, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 31-3-2019 ஆம் தேதி வரை பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ.1,512/- வீதம் 568 கோடியே 47 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் என பாதிக்கப்பட்ட 1,15,696 தென்னை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், விடுபட்ட தென்னை விவசாயிகள் இருப்பார்களேயானால், அவர்களின் மறுகட்டமைப்புக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு அலுவலரை நியமித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சிறப்பு அலுவலரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால், நிச்சயமாக அதுவும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரிசீலனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, உடனடியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

2019 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். நாளை பார்க்கலாம். (குறுக்கீடு) நிறைய பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.*

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

அமெரிக்கன் படைப்புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான வேளாண்மைத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தியில் மக்காச்சோளம் முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்காச்சோளம் பயிரிடுபவர்களில் 80 சதவீதத்திற்கும்மேல் சிறு, குறு விவசாயிகள்தான். ஆடி, புரட்டாசி மற்றும் சித்திரைப் பட்டங்களில் 80 சதவீதம் மானாவாரியாகவும், எஞ்சியுள்ளவை இறவைப் பயிராகவும், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 3.5 இலட்சம் எக்டரில் மக்காச்சோளம் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுகிறது. வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.*

மாறிவரும் பருவநிலை காரணமாக, அமெரிக்காவில் மக்காச்சோளப் பயிரைத் தாக்கும் அமெரிக்கன் படைப்புழு, அமெரிக்காவிலிருந்து 2016 ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளில் பரவி, 2018 ஆம் ஆண்டு நமது நாட்டிலும் பரவியது. தற்போது, நம் அண்டை நாடுகளான இலங்கை, வங்கதேசம், சீனா, வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளிலும் பரவி, குறிப்பாக, மக்காச்சோளப் பயிரினைத் தாக்கி உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.